Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (16-10-65) இதழ் 246

விசுவாவசு புரட்டாதி 30 ஜ: ஆகிர் பிறை 20 சனிக்கிழமை




## பிரெஞ்சு விஞ்ஞானிகளுக்கு நோபல் பரிசு

ஸ்டாக்ஹோம் அக். 15 புற்றுநோயை மாற்றும் கண்டுபிடிப்புக்காக 3 பிரெஞ்சு விஞ்ஞானிகளுக்கு வைத்திய நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. 1928-ம் ஆண்டுக்குப் பின் பிரான்சுக்குக் கிடைக்கும் நோபல் பரிசு இதுவே முதல் தடவையாகும்.

# 14,000 ஊடுருவலாளர் (காஷ்மீரில் மீண்டும் புக) ஆயத்தம்”

## உள்ளே நுழைந்தால் தகுந்த அடிகிடைக்கும் என எச்சரிக்கை

### ஐ. நா. வுக்கு இந்தியா புகார்

நியூயோர்க், அக். 15

காஷ்மீருக்குள் பெருமளவு ஆயுதம் தாங்கிய புதிய ஊடுருவாளர்களை அனுப்ப பாகிஸ்தான் வேகமாக முயற்சி செய்துவருவதாயும், வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் ஆயுதமும், பயிற்சியும் அளிக்கப்பட்ட 14,000 ஊடுருவல்காரர்கள் பாகிஸ்தானிய காஷ்மீருக்குள் வந்திருப்பதாயும் இந்தியா ஐ. நா.விடம் புகார் தெரிவித்திருக்கிறது.

ராவல்பிண்டி வழியாக இந்த ஊடுருவாளர்கள் காஷ்மீருக்கு வந்தனர் என்றும், அஸாத் காஷ்மீரிலும் இவ்விதம் பயிற்சியளிக்கப்பட்ட ஆயுதபாணிகள் திரட்டப்பட்டிருக்கிறார்கள் என்றும் அது மேலும் கூறியிருக்கிறது.

காஷ்மீருக்குள் மீண்டும் ஊடுருவாளர் நுழைவார்களானால் அதை ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகக் கருதி தற்காப்பை முன்னிட்டு தகுந்த எதிர் நடவடிக்கை எடுத்துக்கொள்ள இந்தியாவுக்கு உரிமை உண்டு என எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

“ஊடுருவாளர்களை முன்னிலும் அதிக வேகமாகவும், தீவிரமாகவும் அனுப்ப ஆயத்த செய்யப்பட்டு வருகிறது என எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. பல்வேறு அரங்குகளிலும் கொரில்லாக்களை பாகிஸ்தான் தீவிரமாகத் திரட்டி வருகிறது” என இந்திய நிரந்தரப்பிரதிநிதி திரு. பார்த்தசாரதி யுதாண்டுக்கு அறிவித்திருக்கிறார்.

## ரூ. 90 லட்சம் செலவில் கட்டிப்பால் தொழிற்சாலை

### பொலனறுவையில் நிறுவப்படும்

பொலனறுவை, வெள்ளி நியூஸிலாந்தின் உதவியுடன் பொலனறுவையில் அமைக்கப்படவிருக்கும் கட்டிப்பால் தொழிற்சாலைக்கான அஸ்திவாரக்கல்லை உணவுமந்திரி திரு. எம். டி. பண்டா நாட்டினார்.

இத்தொழிற்சாலை 1967 ம் ஆண்டில் பூர்த்தியானபின் உள்நாட்டு கட்டிப்பால் தேவையைப் பூர்த்திசெய்யும் எனதிரு. பண்டா கூறினார்.

தற்போது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 90 லட்சம் பெறுமதியான கட்டிப்பால் இறக்குமதி செய்யப்படுகிறதென்றும், 1967-ம் ஆண்டுக்குப் பின் 90 லட்சம் ரூபாய் வெளிநாட்டுச் செலாவணியில் மிச்சம் ஏற்படுமென்றும் மந்திரி கூறினார்.

கட்டிப்பால் தயாரிப்பு சம்பந்தமாக 5 இலங்கையர்களுக்கு நியூஸிலந்தில் விசேஷ பயிற்சியளிக்கப்படும்.

தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட்டபின் அதை நடத்துவதற்கான பயிற்சியையும், இதர உதவிகளையும் நியூஸிலந்து அளிக்கும்.

## பொலிஸ் அதிகாரி பற்றி மந்திரிக்கு எம். பி. புகார்

மன்னார். வெள்ளி. “மன்னார் உதவி பொலிஸ் அதிகாரி என்னை பொதுமக்கள் மத்தியில் அவமதித்ததுடன் என்னைத் தூஷித்துமுள்ளார்.”

இந்த முறைப்பாட்டை மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. ஏ. அழகக்கோன் ராஜாங்க மந்திரியின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

மேலும் திரு. அழகக்கோன் தனது முறைப்பாட்டில்தெரிவித்திருப்பதாவது- சென்ற கிழமை தொழில் மந்திரி முகம்மதுவிற்கு ஒரு பொது இராப்போசன விருந்து மன்னார்பட்டின சபையினால் அளிக்கப்பட்டது. அம்பொழுது நான் மன்னார் பொலிசாரின் இராட்சத முறையான நடைமுறைகளைப்பற்றி குறிப்பிட்டிருந்தேன். 20 வருடங்கள் மன்னாரில் வசித்துவந்தவர்கள் சட்டவிரோதக் குடியேற்றக் காரர்கள் என்ற போர்வையில் கைதுசெய்யப்பட்டு பல மாதங்களாகக் காவலில் வைக்கப்பட்டு துன்புறுத்தப்படுவதையும் குறிப்பிட்டேன்.

இந்த அநாகரிகமான முறைகள் கைவிடப்பட வேண்டுமென்றும் பொதுமக்கள் தங்கள்காரியங்களைச் செய்ய பொலிசார் ஒருவித தடையும் விதிக்கக்கூடாதென்றும் மந்திரிக்கு வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

விருந்து முடிந்தபின்னர் மன்னார் உதவிப் பொலிஸ் அதிகாரி என்னை அணுகி இப்படியான இடங்களில் இதுபோன்று பேசக்கூடாதென்றும் பாராளுமன்றத்தில் இவைபற்றிச் சத்தம் செய்யும்படியும் குறிப்பிட்டு நான் தான் ‘கள்ள தோணிகளை’ இங்கே கொண்டு வருகிறேன் என்றும் குறிப்பிட்டார்.

மன்னார்எம். பி. இதுபற்றிஐ. ஜி. பி, மன்னார்அரசாங்கஅதிபர் ஆகியோருக்குப் புகார் செய்துள்ளார்.

## தேசிய சுவீப் முடிவுகள்

பம்பலப்பிட்டி, வெள்ளி நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு
01 E 0586 - ரூ. 59,700

2-வது பரிசு
02 J 0583 - ரூ. 23,880

3-வது பரிசு
10 P 0515 - ரூ. 5,970

(2-ம் பக்கம் பார்க்க)

## இளவாலை கொலை முயற்சி வழக்கு

யாழ்ப்பாணம், சனி கடந்த ஐந்து தினங்களாக வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட இளவாலை கொலைமுயற்சி வழக்கு 18-ம் தேதி திங்கட்கிழமை காலை வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் 1964-ம் ஆண்டு மே மாதம் 5-ந் தேதிஇளவாலையில் ரி. விஜயரத்தினம் என்பவரை, துரைரத்தினம் என்பவர் கொலை செய்ய முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில்அட்வக்கேட் திரு. ரி. கணேசலிங்கம், திருவாளர்கள் ஆர். ஜே. செல்வரத்தினம், தளையசிங்கம் யோகநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராகின்...

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில்

## “மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க வழிசெய்க!”

### மந்திரிக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி ஆஸ்பத்திரி உள் நோயாளர்களுக்கும் வெளி நோயாளிகளுக்கும் வைத்திய நிபுணர்களாலும் வைத்திய அதிகாரிகளாலும் எழுதப்படும் மருந்துகளில் பல யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் இல்லாதிருப்பது மிக்க வருத்தத்துக்குரியதொன்று என்றும் இந்த நிலையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சுகாதார மந்திரியை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி கமிட்டி கேட்டுக்கொள்கிறது எனவும் தெரிவிக்கும்பிரேரணையொன்றுக்கான முன்னறிவித்தலை மேற்படி கமிட்டியின் அங்கத்தவரான திரு. சி. முத்துத்தம்பி கொடுத்துள்ளார்.

(6-ம்பக்கம்பார்க்க)

நகைகளுக்கு
யப்பான் ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518. தந்தி: 'யப்பான்'

தீபாவளிப் பண்டிகையை குதூகலமாகக் கொண்டாட வேண்டுமா?
விசேஷமாக இறக்குமதி செய்துள்ள
காஞ்சிபுரம், ரே-கொட்டன், டெக்கா சாறிகளும்
மற்றும்
பலவிதமான பட்டு, நூல் பிடவைகளும்; மில் வேட்டிகளும்
80, 100, 120, 140-ம் நம். கைத்தறி சேலைகளும்
ஏராளமான டிசைன்களில் உள்ளன.
சிறுவர்களுக்கான
காற்சட்டைகள், கவுன் வகைகள்,
சேட்டிங், சூட்டிங் வகைகள்
கண்கவர் டிசைன்களில் கையிருப்பிலுண்டு.
உங்கள் தேவைகளுக்கு இன்றே விஜயஞ்செய்யுங்கள்!
ஆ. அப்பையா அன் கோ.,
தலைமை ஸ்தாபனம்: 82, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
கிளை ஸ்தாபனம்: 54, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 506

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

வாழ்க்கை விலைமதிக்கமுடியாத செல்வமாகும். இது இறைவன் நமக்கு அளித்துள்ள மிகப் புனிதமான வரப்பிரசாதம். தியானத்திலும் சுயநலமற்ற சேவையிலும் அதைப் பயன்படுத்துக. வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியையும் லாபகரமாகப் பயன்படுத்துக.

—சுவாமி சிவானந்தர்.


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு புரட்டாதிமீ 30 உ (16-10-65)


## நல்ல அறிகுறிகள்

இந்திய-சீனத் தகராறும், இந்திய-பாகிஸ்தான் தகராறும் சுமுகமாகத் தீரக்கூடிய சில நல்ல அறிகுறிகள் இப்போது தோன்றியுள்ளன. உடனடியாக இப்பிரச்னைகள் தீர்ந்துவிடுமென்று உறுதியாகக்கூறமுடியாதெனினும், அவ்விரு நல்ல அறிகுறிகள், இவ்விஷயத்தில் நம்பிக்கை அளிப்பதாக உள்ளன.

இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் யுகோஸ்லேவியா, செக்கோஸ்லேவியா, ருமேனியா, எதியோப்பியா முதலிய நான்கு நாடுகளில் திக்விஜயம் செய்துவிட்டுத் திரும்பியுள்ளது சில நல்ல பலன்கள் அளித்துள்ளது. இதில் ருமேனிய அதிபர் கூறியுள்ள ஒரு யோசனை முக்கியமானது. இந்தியாவுக்கும் சீனத்துக்குமுள்ள தகராறைத் தீர்த்துவைக்கத் தாங்கள் உதவுவதாக ருமேனிய அதிபர் தாமாகமுன்வந்துள்ளார். சீனத்தின் நண்பரும், பீகிங்குக்குச் சமீபத்தில் சென்று திரும்பியவருமான அவர், சீனத்தின் மனதை நன்குணர்ந்தே இதைக் கூறியிருக்கவேண்டும். இந்தியாவுடன் தகராறை வளர்த்துக்கொண்டு போவதால் சீனத்துக்கு எவ்வித நன்மையுமில்லை. இதற்கு மாறாகப் பாதகமே அதிகம். ஆகவே இந்தக் தகராறை சுமுகமாக முடித்துக்கொள்ள சீனம், சிறப்பாக இந்தோனேஷிய சம்பவங்களுக்குப் பின், ஆவலுடன் இருப்பது இயற்கை.

மேலும் புதுசீனத்தை ஐக்கிய நாடுகள் சபையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கப் பிரதிநிதி பலமாக ஆதரித்திருக்கிறார். இதேசமயம் அமெரிக்கப் பிரதிநிதியும் புதுசீனத்தை, ஆயுதப் பரிகரண மகாநாட்டில் சேர்த்துக் கொள்ளவேண்டிய அவசியத்தை எடுத்துச் சொல்லியுள்ளார். சில நிபந்தனைகளைப் புதுசீனம் கூறியுள்ளதெனினும், ஐ. நா. ஸ்தாபனத்தில் சேர இச்சமயம் அது மிக ஆவலுடனிருப்பின் அதில் வியப்பில்லை. இதன் அவசியத்தை இந்தோனேஷிய சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

அதனுடைய பலாத்கார புரட்சிவாதத்துக்கும் எதிர்ப்புகள் அதிகரித்துள்ளதால், இதுபற்றியும் அது புனராலோசனை செய்யவேண்டியிருக்கும். எப்படியும் ருமேனியா சமரசத்துக்காக முயலுவதாயின், அது வெற்றிபெறவும், கொழும்பு மகாநாட்டு யோசனைகளை ஏற்று, அதன்படி புதுசீனம் நடக்கவும் இப்போது அதிக வாய்ப்புகள் உண்டு. கொழும்புயோசனைகளைப் பீகிங் ஏற்பதாயின் இந்தியாவும் புதுசீனத்துடன் எல்லைப் பிரச்னையை சமாதானப் பேச்சுகள் மூலம் தீர்த்துக்கொள்ள தயாராகவுள்ளது.

போர்மோஸாவிலுள்ள தேசிய சீன அரசாங்கம் புதுசீனத்தை ஐ. நா.வில் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்று தடுத்துவருகின்றது. புதுசீனம் சேர்த்துக்கொள்ளப்பட்டால், தங்கள் நிலைமையும், அந்தஸ்தும் மோசமடைந்துவிடுமென்று அவர்கள் பயப்படுவது இயற்கை. என்றாலும் இப்பேச்சைக் கேட்டுக்கொண்டு, அமெரிக்கா இன்னும் புதுசீனத்தை மறிப்பது அமெரிக்காவுக்கோ, உலக சமாதானத்துக்கோ எவ்விதத்தும் நல்லதாகாது. ஆகவே புதுசீனம் மனம் மாறி, இந்தியாவுடன் சமாதானம் செய்துகொள்ள முன்வரின், ஐ. நா.விலே புதுசீனம் சேருவதை அமெரிக்காவும் எதிர்க்கமுடியாது.

இதேசமயம்கோடைக்கானலில் பாதுகாப்பிலுள்ள காஷ்மீரைச் சேர்ந்த ஷேக் அப்துல்லாவிடம் காஷ்மீரைப் பற்றிப் பேச, ஜயப்பிரகாஷ் நாராயணனின் பிரதிநிதிகள் சென்றுள்ளனர். இதற்கு இந்திய அரசாங்கமும் அனுமதியளித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். சென்ற மாதச்சண்டையின் பலாபலன்கள் ஷேக் அப்துல்லாவின் மனதை மாற்றவும், நிலைமை பற்றிப் புனராலோசனைசெய்யவும் அவருக்குப் பெரிய தூண்டுதலாக இருக்கவேண்டும். பிளவுபட்ட காஷ்மீர் ஒன்றுபட்டால்தான் அங்குள்ள அகதிகள் முதலிய பிரச்னைகளும் சுமுகமாகத் தீரமுடியும். காஷ்மீர் மக்களின் சுபிட்சத்தைக் கருதி, இப்பிரச்னையையும் தீர்க்கதரிசனத்துடன் விட்டுக்கொடுத்து தீர்க்கவும், இதனால் இந்திய-பாகிஸ்தான் உறவுகளும் மேம்படவும், கூடிய காலம் நெருங்கி வருகிறதென்றே கொள்ளலாம். யுத்தம் இப்பிரச்னையைத் தீர்க்க முடியாதென்பதைச் சம்பந்தப்பட்ட பலரும் இதற்கிடையே உணர்ந்திருக்கவேண்டும்.

## மருந்துத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் நிலவும் மருந்துத்தட்டுப்பாட்டை நீக்கி ஒழுங்கான முறையில் மருந்து கிடைப்பதற்கு உத்தரவாதமளிக்கும் வழிவகைகளை மேற்கொள்ளும்படி சுகாதார மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக் கமிட்டிக் கூட்டத்திற்கு வரவிருக்கின்றது. கமிட்டி அங்கத்தவர்களுள் ஒருவரான முதலியார் ஸி. முத்துத்தம்பி இப்பிரேரணையைக் கொண்டுவர முன்னறிவித்தல்கொடுத்திருக்கிறார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவது புதிய விஷயமல்ல. ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் நோயாளிகளுக்கும் சரி வெளி நோயாளிகளுக்கும் சரி டாக்டர்களும் வைத்திய நிபுணர்களும் கூறும்மருந்துகள்ஆஸ்பத்திரியில் 'இல்லை'யென்றே பதில் அளிக்கப்படும், உயிரைக் காப்பாற்ற உதவும் மருந்துகள்கூடக் கிடைப்பதில்லை. இதனால் பலஉயிர்கள் அநியாயமாகப் பலியான சம்பவங்களும் உண்டு. சாதாரண மருந்துகளிலிருந்து விலை உயர்ந்த அத்தியாவசியமான மருந்துகள்கூடக் கிடைப்பதில்லை. தாதிகள், டாக்டர்கள், நோயாளர் எல்லோரும் உள்ளனர். கட்டில்கள், மெத்தைகள் மற்றும் சகல வசதிகளும் ஆஸ்பத்திரியில் உண்டு. ஆனால் வியாதியைக் குணப்படுத்தும் மருந்துகள்மட்டும்இல்லை.

மருந்துத் தட்டுப்பாட்டினால் நோயாளர் மட்டும் அல்ல டாக்டர்களும் வீண் கஷ்டங்களுக்குள்ளாகின்றனர். ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகளை விநியோகிக்கும் சிவில் மெடிக்கல் ஸ்டோர்ஸ் என்ற அரசாங்க இலாகாவின் அசிரத்தையே இத்தட்டுப்பாட்டுக்குக் காரணம் எனச்சொல்லப்படுகிறது. இது உண்மையானல் மனிதாபிமானமற்ற முறையில் நடந்துகொள்ளும்மெடிக்கல்ஸ்டோர்ஸ் இலாகாவைச்சேர்ந்தவர்களை மன்னிக்கமுடியாது. சுகாதார மந்திரி இவ்விஷயத்தில் உடனடியாகக் கவனம் செலுத்தி இப்பகுதி நோயாளரின் அவலநிலையைநீக்கவேண்டும்.

## தற்காலிகவேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர் சம்பளம்பற்றி எம். பி. கேட்பார்

பம்பலப்பிட்டி, வெள்ளி

'தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களுக்குஅரைச்சம்பளம் வழங்கப்படுகிறதென்பதை கல்வி மந்திரி அறிவாரா? என ஜனப்பிரதிநிதிகள் சபையில் இரத்தின சிறி விக்கிரமநாயகா எம். பி. கேட்கவிருக்கிறார்.

அவர் இம்மாதம் 19-ம் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபை கூடும்போது இக்கேள்வியைக் கேட்பார். அவர் கேட்கவிருக்கும் உபகேள்விகள் சில வருமாறு:-

இவ்விதம் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளஆசிரியர்களுக்கு வாடகைப்படியில் அரைவாசி வழங்கப்படுறதென்பதையும் மந்திரி அறிவாரா? தற்காலிகமாக வேலை நீக்க செய்யப்பட்டதன் விளைவாக அவர்கள் இழந்துள்ள விடுமுறை ரயில்வே வாரண்டுகள், மற்ற சலுகைகள் ஆகியவற்றை அவர்கள் மீண்டும் வேலைக்கமர்த்தப்படும்போது வழங்குவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

## பௌத்தமதம் பற்றி தேரோ கருத்து

மாதம்பை, வெள்ளி

''மற்ற மதங்களை அழிப்பதன் மூலம்பௌத்த மதம் வளர்ச்சிஅடைந்துவிடாது'' என வண. மதிபணசிகா நாயக்கதேரோ பௌத்த பாலமண்டலத்தின் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர். இங்குள்ள மத்திய கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் பேசுகையில் பௌத்தமக்கள் தர்ம வாழ்க்கையைமேற்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

## செல்லக்கதிர்காமத்தில் பௌத்த ஆலயம்?

பல்பலப்பிட்டி, வெள்ளி

கதிர்காமப் புனிதப் பகுதிக்குள்ளிருக்கும் செல்லக் கதிர்காமத்தில் பௌத்த ஆலயம் ஒன்று நிறுவுவதற்குப் பௌத்தர்கள் சிலர் முயற்சித்துங்கூட அரசாங்கமும், அப்பகுதியிலிருக்கும் சைவக் குழுக்களும் அதனைத் தடுத்துள்ளனர் என்பதை உள்ளூராட்சி உதவி மந்திரி அறிவாரா என ஜனப்பிரதிநிதிகள் சபையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்ததிரு. இராஜாவெலேகம கேட்கவிருக்கிறார்.

இந்துக்களுக்கும்பௌத்தர்களுக்கும் புனித ஸ்தலமாக தற்பொழுது விளங்கும்செல்லக்கதிர்காமத்தில் பௌத்த ஆலயம் ஒன்று நிறுவுவதற்கென காணியொன்று வழங்குவதற்கு மந்திரி நடவடிக்கைகள் எடுப்பாராவெனவும் எம், பி. கேட்கவிருக்கிறார்.

## றிற் ஆபிஸர்களுக்கு மீண்டும் 'போனஸ்'

கச்சாம், வியாழன்

யாழ்ப்பாண மாவட்ட றிற் ஆபிஸர் யூனியன், காரியதரிசி திரு சி. எம். எஸ். நாதன் வடபகுதி பிஸ்கால் உதவி அதிகாரி திரு. ஆறுமுகத்தை பேட்டி கண்டதன் பயனாக இவ்வருடத்தில், மீண்டும் இரண்டாவது தடவையாக றிற்ஆபிஸர்களுக்குபோனஸ் வழங்கப்படவிருக்கிறது.

ஐந்துவருட காலமாக கொடுபடாமலிருந்துவந்த 'போனஸ்' யூனியனின் முயற்சியால், கடந்த சித்திரை மாத வருஷப்பிறப்பிற்கு முதல்தடவையாக போனஸ் வழங்கப்பட்டது. மீண்டும் இரண்டாவது தடவையாக தீபாவளிக்குமுன், றிற் ஆபிஸர்களுக்கு போனஸ் வழங்கப்படவிருக்கிறது.

## தேசீய சுவீப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா 298-50 பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:

| | |
|---|---|
| 20 R 0257 | 14 A 0600 |
| 08 G 0501 | 05 G 0883 |
| 01 X 0493 | 10 H 0073 |
| 06 U 0999 | 16 F 0304 |
| 05 O 0721 | 10 C 0665 |
| 06 N 0003 | 21 M 0494 |
| 17 Y 0644 | 12 W 0010 |
| 19 B 0217 | 16 W 0824 |
| 12 D 0700 | 23 Y 0996 |
| 12 V 0957 | 19 J 0445 |
| 19 X 0259 | 09 R 0618 |
| 08 S 0632 | 21 C 0953 |
| 06 P 0885 | 04 E 0659 |
| 12 B 0064 | 08 M 0209 |
| 03 H 0116 | 20 B 0373 |
| 08 A 0622 | 03 J 0421 |
| 12 A 0123 | 02 M 0496 |
| 24 L 0266 | 17 X 0354 |
| 18 P 0738 | 13 C 0004 |
| 22 M 0541 | 04 O 0620 |
| 22 O 0222 | 06 N 0205 |
| 01 Z 0581 | 06 H 0905 |
| 01 Q 0955 | 23 A 0474 |
| 12 L 0517 | 14 H 0710 |
| 15 L 0907 | 22 Y 0249 |
| 08 J 0102 | 10 D 0455 |
| 16 M 0919 | 12 S 0652 |
| 05 T 0275 | 17 L 0382 |
| 16 L 0965 | 06 H 0604 |
| 24 Z 0227 | 01 W 0348 |
| 11 Q 0539 | 10 Y 0090 |
| 08 F 0023 | 13 W 0536 |
| 17 C 0608 | 24 S 0783 |
| 10 F 0141 | 14 K 0744 |
| 08 D 0382 | 12 V 0337 |
| 22 O 0351 | 10 M 0368 |
| 12 E 0846 | 17 X 0301 |
| 24 G 0344 | 16 O 0372 |
| 12 H 0035 | 07 Y 0516 |
| 04 E 0562 | 15 H 0438 |
| 08 K 0960 | 18 O 0302 |
| 18 Y 0292 | 08 Q 0988 |
| 21 A 0485 | 08 Z 0461 |
| 04 Z 0176 | 17 G 0338 |
| 02 L 0909 | 02 F 0301 |
| 22 H 0045 | 02 J 0352 |
| 12 J 0758 | 04 H 0562 |
| 07 Z 0658 | 23 T 0807 |
| 06 S 0953 | 24 D 0327 |
| [illegible] H 0565 | 13 S 0190 |

# ஐயாறன் எழுதுகிறது

எம். ஜி, ஆர்., சரோஜா தேவி இவ்விருவரும் யாழ்ப்பாணத்துக்கும் வர ஒப்புக்கொண்டிருப்பதாக ஓர் அன்பர் தெரிவித்தார், தாங்கள் கொழும்புக்கு வர முடிந்தால், இந்தியா திரும்பும் வழியிலே யாழ்ப்பாணத்துக்கும் வந்து 6 மணி நேரம் தங்கியிருக்கலாமென்று எழுதியிருப்பதாக ஓர் அன்பர் வந்து தெரிவித்தார். இதைக் கேட்க இங்கு பலருக்கும் பெருமகிழ்ச்சியாக இருக்கும்.

கொழும்புக்கு எம். ஜி. ஆர். வருவதாயின் அங்கு சென்றாயினும் அவரைப் பார்ப்பதென்று இப்பகுதியில் பலர் ஆவலுடன் இருப்பதாக அறிந்தேன். செலவையும் பிரயாணக்கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் ஏராளமானவர்கள் செல்லக்கூடும். அவ்வளவு அபிமானிகள் அவருக்கு இங்கு இருக்கின்றனர். இதை எம். ஜி. ஆர். நன்கறிவார். அவர்களுக்குச் சிரமம் கொடுக்கப்படாதென்று தான் யாழ்ப்பாணத்துக்கு சில மணி நேரமாயினும் வர அவர் ஒப்புக்கொண்டிருக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் எங்கே அவருக்கு வரவேற்புக்கூட்டம் நடத்தப்போகிறீர்கள் என்று அந்த அன்பரைக் கேட்டேன். அநேகமாக யாழ்ப்பாண ஸ்டேடியத்திலும், தெல்லிப்பளையிலும் இருக்கலாமென்றும் ஒரே இடத்தில் மட்டும் வைத்தால் கூட்டம் சமாளிக்க முடியாமல்போகுமென்றும் அவர் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

தி. மு. க. என்று சொல்லி இலங்கைக்கு அவரை வர முடியாமல் இதுவரை தடுத்துவிட்டனர், இப்போதும் கூட அவர் வராமல் தடுத்துவிட முயற்சிகள் நடந்தன. செனட்சபை வரையிலும் கூட இது எட்டிவிட்டது. எதிர்க்கட்சி மெம்பரொருவர் இதைப் பற்றிக் கேள்வி கேட்டார். ''தி. மு. க. விலே எம். ஜி. ஆர். ஒரு பிரமுகர். இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளை தென்னிந்தியாவுடன் இணைப்பதே தி. மு. க. வின் நோக்கம். திருகோணமலை துறைமுகத்தையும் தென்னிந்தியாவுடன் இணைத்துவிட தி. மு. க. திட்டம் போட்டுள்ளது. ஆகவே எம். ஜி. ஆர். இங்கு வருவதைத் தடுத்துவிடவேண்டும்'' என்று அந்த செனட்டர் பயமுறுத்தினர்.

நல்லவேளையாக இதற்கு அரசாங்கக்கட்சி மசியவில்லை. நீதிமந்திரி சரியான சாட்டை கொடுத்தார். ''தி. மு. க. வைப் பற்றி சிலருக்கு கிலி பிடித்துள்ளதாகத் தெரிகிறது. இத் தீவுக்கு யாரும் தாராளமாக வரும் சுதந்திரத்தை இலங்கை அரசாங்கம் தடுக்கத் தயாரில்லை'' என்று மந்திரி ''பட்''டென்று சொல்லிவிட்டு, ''எம். ஜி. ஆரின் விஜயத்தில் ஏதும் சதிகள் இருப்பின் அதை அரசாங்கம் கவனித்துக் கொள்ளும்'' என்றார். பலே பலே! தி. மு. க. மீது வீண் புரளிகளைக் கட்டிவிட்டு, பூச்சாண்டி காட்டி எந்தத் தமிழ்த்தலைவர்களும் இங்கு வரமுடியாமல் சிலர் திட்டமிட்டுச் செய்துவந்தனர். இனி அந்த 'பாச்சா' பலிக்காதென்றும் யாரும் வர இலங்கை அரசாங்கம் விஸா அளிக்கும் என்றும் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோ-பாக். தகராறில் ரஷ்யா-அமெரிக்கா மத்தியஸ்தம் உருவாகலாம்

## ஐ. நா. மேற்பார்வையாளர் குறித்து 4 வல்லரசுகள் கருத்து வேற்றுமை

### பிரச்னையைத் தீர்க்க பல்வேறு அரங்குகளில் ராஜதந்திர முயற்சிகள்

நியுயோர்க், அக். 15

பாரத - பாகிஸ்தான் யுத்தநிறுத்த மேற்பார்வையாளர்களுக்கு பணம் செலவிடுதல், கட்டுப்பாடு ஆகியன பற்றி ஐ. நா. வில் நான்கு அரசுகளிடையே முட்டுக்கட்டை உருவாகியிருக்கிறது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நான்கு நாடுகளின் பிரதிநிதிகள் இன்று மீண்டும் உடன்பாடு காணும்பொருட்டுக் கூடுகிறார்கள்.

அமெரிக்காவும், பிரிட்டனும் இதுசம்பந்தமாக யுதாண்டின் திட்டத்தை ஆதரித்தன. ரஷ்யாவும், பிரான்சும் அதை எதிர்த்தன. விஷயம் விரைவில் பாதுகாப்பு சபைக்குப் போகும் என அறிவிக்கப்படுகிறது.

ஐ. நா. பார்வையாளர்களுக்குப் பணம் செலுத்தத் தம்மால் முடியாது என இந்தியா நேற்று யுதாண்டுக்குத் தெரிவித்தது. இந்தியா ஆக்கிரமிக்கப்பட்ட நாடாதலால் இது சாத்தியமல்ல என பாரதப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருக்கிறார்.

#### யுதாண்டின் பிரதிநிதி

இதற்கிடையில் படைவிலக்கத்திற்கு துல்லியமான திட்டத்தைத் தெரிவிக்குமாறு யுதாண்ட் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளையும் கேட்டிருக்கிறார். இது சம்பந்தமாகத் தாம் நியமிக்கும் பிரதிநிதியுடன் நியுயோர்க்கில், அல்லது இந்தோ—பாக். எல்லையில் சந்தித்துப் பேசுமாறும் இருநாடுகளையும் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

யுதாண்ட் திரு. பார்த்தசாரதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் ஒரே பார்வையாளர் குழு இருக்கவேண்டுமென்ற இந்தியாவின் கோரிக்கையை அவர் நிராகரித்துவிட்டார். இப்போது பார்வையாளர்கள் தங்களால் இயன்ற அளவில் சேவைசெய்து வருகிறார்கள் என்றும், யுத்தநிறுத்தத்தையும் படைவிலக்கத்தையும் தாம் ஒன்றாக இணைக்கவில்லை என்றும் யுதாண்ட் கூறியிருக்கிறார்.

#### ரஷ்ய-அமெரிக்க முயற்சி

அதே சமயம் இந்தோ—பாகிஸ்தான் தகராறில் அமெரிக்காவும், ரஷ்யாவும் மத்தியஸ்தம் செய்யும் முயற்சியில் அமெரிக்கா திரைமறைவில் ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது.

காஷ்மீரிலிருந்து ஊடுருவாளர் விலக்கப்படும்வரை எந்த அரசியல் பேச்சுக்கும் இந்தியா தயாராயில்லை என வெளிநாட்டு மந்திரி சுவர்ண் சிங் நேற்று நியுயோர்க்கில் மீண்டும் கூறினார்.

யுத்தநிறுத்தம் உறுதியாக அனுஷ்டிக்கப்பட வேண்டும் என இந்தியா வற்புறுத்தி வருகிறது. அரசியல் தீர்வு காண உத்தரவாதத்தை பாகிஸ்தான் வற்புறுத்துகிறது.

பாதுகாப்பு சபைத்தலைவர், நேற்று திரு. பூட்டோவையும், திரு. சுவர்ண்சிங்கையும் தம்முடன் பகலுணவுக்கு அழைத்து, இருவருடனும் நிலைமை பற்றிப் பேசினார். திரு. சுவர்ண்சிங் ரஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிகோவுடன் இரண்டரை மணி நேரம் பேசினார்.

திரு சாஸ்திரியையும், அயூப்கானையும் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி ஜோன்ஸன் மீண்டும் அழைத்திருப்பதுபற்றித் தமக்கு எதுவும் தெரியாது என வாஷிங்டனில் வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்தியாவில் காவலில் உள்ள பாகிஸ்தான் பிரஜைகள் விடுவிக்கப்பட்டால், தம்மிடம் காவலில் உள்ள இந்தியர்களை விடுவிக்கத் தயாராய் இருப்பதாக பாகிஸ்தான் கூறியிருக்கிறது.

#### மேலும் பேச்சுக்கள்

நேற்று இந்தியப் பிரதமர் சாஸ்திரி ஜனாதிபதி ராதாகிருஷ்ணனுடன் ஒரு மணி நேரம் பேசினார். பின் ரஷ்யத் தூதர் பெனடிக்டோவ் சாஸ்திரியைச் சந்தித்து பிரதமர் கோஸிஜின் கடிதம் ஒன்றை ஒப்படைத்தார். காஷ்மீர் முதல் மந்திரி. திரு. ஸாதிக்கும் பிரதமரைச் சந்தித்தார். பின் திரு. ஸாதிக் காங்கிரஸ் தலைவர் காமராஜுடன் பேச்சு நடத்தினார்.

## "இந்தியாவுடன் சமாதானமாக வாழவே விரும்புகிறோம்"

### ஜனாதிபதி அயூப் அறிவிப்பு

ராவல்பிண்டி, அக். 15

பாகிஸ்தான் இந்தியாவுடன் சமாதானமாக வாழ விரும்புவதாயும், ஆனால் இந்தியா யுத்த நிறுத்தத்தை சரியாக அனுசரிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி அயூப்கான் கூறினார்.

ஜனாதிபதி யுத்த முன்னணிப் பகுதிகளுக்குச் சென்று பாகிஸ்தான் வீரர்கள் மத்தியில் பேசினார்.

''இந்தியா யுத்த நிறுத்தத்தை மீறினால் திருப்பித் தாக்குவதைத் தவிர தங்களுக்கு வேறு வழியில்லை'' என்றும் அயூப் குறிப்பிட்டார்.

அதேசமயம் ஐ. நா. பொதுச் சபையில் நேற்று உரை நிகழ்த்திய பாகிஸ்தான் பிரதிநிதி திரு. தாரிக் அப்துல்லா காஷ்மீரில் நடப்பவற்றை நேரில் காணும் பொருட்டு பாரபட்சமற்ற கமிஷன் ஒன்றை அங்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டார்.

''இந்தியத் துருப்புக்களின் அட்டூழியத்தால் 60,000 க்கு மேற்பட்ட முஸ்லீம்கள் அஸாத் காஷ்மீருக்கு ஓடிவிட்டார்கள். கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் 30 கிராமங்களை இந்தியத் துருப்புக்கள் கொளுத்தினர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காஷ்மீர் மக்கள் சுயநிர்ணயத்திற்காக ஒரு முகமாகக் கிளர்ச்சி செய்து வருகிறார்கள் என காஷ்மீர் புரட்சிசபை பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இந்தியத் துருப்புக்கள் அகதிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பெருந்தொகையானோர் காயமடைந்தனர் என்றும் ஒரு டசன் பெண்களை அவர்கள் கடத்திச் சென்றதாயும் அவர் கூறினார்.

காஷ்மீரில் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாயும் அவர் கூறினார்.

## ஒரு படத்துக்கு ரூ. 40 லட்சம்

நியூயோர்க், அக். 15

இங்கு ஏலத்தில் விடப்பட்ட வர்ணப்படம் ஒன்று 8 லட்சம் டாலருக்கு விலை போயிற்று! அமெரிக்க கோடீஸ்வரர் ஒருவர் அதைவாங்கி உலகரிக்கார்டை ஏற்படுத்தினர்.

## தலைமன்னர்-தனுஷ்கோடி கப்பல் சேவை

### விரைவில் ஆரம்பமாகும்

ராமேஸ்வரம், அக். 15

தனுஷ்கோடிக்கும் தலைமன்னருக்கும் இடையே முன்பு நடைபெற்று வந்த கப்பல்சேவை இன்னும் இரு மாத காலத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

கப்பல் துறை கார்ப்பரேஷனின் உயர் அதிகாரிகளான காப்டன் கோலி., பிரதம எஞ்சினியர் வாடியா ஆகியோர் 8-ந் திகதியன்று மண்டபத்திற்கு விஜயம் செய்து கப்பல் துறையை நிறுவ மண்டபம், ராமேஸ்வரம், பாம்பன் ஆகிய இடங்களிலுள்ள வசதிகளைப்பற்றி ஆராய்ந்தனர் என்றும் தெரியவருகிறது.

அனேகமாக ராமேஸ்வரம் சிறந்த இடமாகக் கருதப்பட்டுள்ளது.

## மேஜர் ஜெனரல் சுகட்டோ இந்தோனேஷிய பிரதம தளபதி

### சுகர்ணோ அறிவிப்பு

ஜாகர்த்தா, அக். 15

இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னோ 1 நிமிஷத்துக்குக் குறைவாகவே வானொலியில் பேசியபோது மேஜர் ஜெனரல் சுகட்டோவை, ஜெனரல் அஹ்மத் யானிக்குப்பதில் பிரதம தளபதியாக நியமித்திருப்பதாய் அறிவித்தார். மந்திரி சபையில் அவர் ஒரு அங்கத்தினராய் இருப்பார் என்றும் அவர் கூறினார்.

அதே சமயம் ராணுவத்தில் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கை அகற்றும் சண்டையில் இந்தோனேஷிய ராணுவம் தொடர்ந்து ஈடுபட்டிருக்கிறது.

சீன உளவு ஸ்தாபனம் தான் புரட்சிக்கு வித்திட்டு அதை ஆதரித்தது என்றும், ஏராளமான ஆயுதங்களையும் பணத்தையும் அது கிளர்ச்சிக்காரர்களுக்கு அளித்தது என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் திரு. டி. என். ஐடிட்டை பதவியிலிருந்து விலக்கி கம்யூனிஸ்ட் கட்சியை சீரமைக்க முயற்சி நடைபெறுவதாயும், புரட்சிக்கு ஐடிட்தான் காரணம் என அவர் மீது பழி சுமத்த கட்சி முயற்சிப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

ஐ. நா. பொதுச்சபையில் ஆப்கன் பிரதிநிதி:

## "காஷ்மீரைவிட பக்தூன் மக்களின் தொகை அதிகம்

### பாகிஸ்தான் அவர்களுக்கு சுயநிர்ணயம் அளிக்கட்டும்"

நியூயோர்க், அக். 15

பக்தூனிஸ்தானுக்கு சுயநிர்ணய உரிமை பெறும் விஷயத்தில் ஐ. நா. உதவி புரிய வேண்டும் என பொதுச்சபையில் பேசிய ஆப்கானிஸ்தான் பிரதிநிதி வற்புறுத்தினார்.

பக்தூனிஸ்தானின் ஜனத்தொகை காஷ்மீரைவிட அதிகம் என்றும், பக்தூன் மக்களின் சுயநிர்ணய உரிமை சமாதான முறையில் தீர்க்கப்படும் என நம்புவதாயும் அவர் கூறினார்.

பாகிஸ்தான் பக்தூன் மக்களின் சுயநிர்ணயத்தை மறுக்க எவ்விதக் காரணமும் இல்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

சிங்கப்பூர் பிரதிநிதி திரு. அபுபக்கர் சபையில் பேசிய போது, சீனா, பாகிஸ்தான், இந்தோனேஷியா ஆகிய நாடுகள் ஒரு குழுவாக அமையுமானால் அது ஆசியாவின் பாதுகாப்புக்குபேரபாயமாக விளங்கும் எனக் குறிப்பிட்டார். இந்தோனேஷியாவின் உதாரணத்தைப்பின்பற்றி பாகிஸ்தான் ஐ. நா.விலிருந்து விலகுவதாகக் கூறுவதை அவர் சபையில் நினைவூட்டினார்.

## மிட்டாயில் விஷம்?

புதுடில்லி, அக். 15

விஷம் கலந்த உணவை உட்கொண்ட 120பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 24மணித்தியாலங்களிலும் பெண்களும், ஆண்களும், குழந்தைகளுமாக 120 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் 10 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. ஒரே இடத்தில் தயாரிக்கப்பட்ட மிட்டாய் பண்டத்தை இவர்கள் சாப்பிட்டார்களாம்.

## ஜோன்ஸன் உடல் நிலை

வாஷிங்டன், அக். 15

ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டிருக்கும் ஜனாதிபதி ஜோன்ஸன் நேற்று சற்றுத்தூரம் உலாவினார். அவர் பொதுவாகக் குணமடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

## "அரபு நாடுகளுக்கு நேட்டோ அபாயம்"

--மேனன்

புதுடில்லி, அக். 15

காஷ்மீரின் ஒரு பகுதியை சீனாவுக்குக் கொடுத்த ஒப்பந்தத்தைப் பகிஸ்தான் புறக்கணிக்க வேண்டுமென திரு. கிருஷ்ணமேனன் கூறினார்.

ஜம்மு-காஷ்மீரை பாகிஸ்தானிடம் ஒருபோதும் கொடுக்கமாட்டோம். சீனாவுடனான ஒப்பந்தத்தைப் புறக்கணித்துவிட்டு அஸாத் காஷ்மீரிலிருந்து பாகிஸ்தான் விலகிச் செல்வதே காஷ்மீர் பிரச்னைக்குப் பரிகாரம் என்றும் மேனன் கூறினார்.

காஷ்மீரில் சர்வஜனவாக்குரிமையை வற்புறுத்திய நாடுகள் இப்போது தங்கள் போக்கை மாற்றிவருவதாகத்தெரிகிறதென்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தானுக்கு நேட்டோ உதவி கிடைப்பதானால் அது பாரதத்துக்கு மட்டுமின்றி அரபு நாடுகளுக்கும் பேராபத்தாக முடியுமென்றார் மேனன்.

## சீன முஸ்லிம்கள் அதிருப்தி

புதுடில்லி, அக். 16

சீனாவின் சிக்கியாங் மாகாணத்தில்முஸ்லிம்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும், அவர்களில் பலர் ரஷ்யப் பகுதிக்குள் தஞ்சம் புகுந்திருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

## ஐ. நா.வும் சீனாவும்

ஹேக், அக். 15

சீனா தன் சொந்த நடவடிக்கைகளால் ஐ. நா.வில் அனுமதிக்கப்படுவதை சிரமமாக்கி வருகிறதென டச்சு பிரதம மந்திரி கூறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி கற்பிக்க பல்கலைக்கழகத்தில் வசதியில்லை

## தமிழ் விரிவுரையாளர்கள் அதிகாரிகளிடம் முறையீடு

வெள்ளவத்தை, வெள்ளி

கொழும்பிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழக கலைப் பிரிவில் அனுமதிபெற்றுள்ள மாணவர்கள் பெரும் அவல நிலைக்குள்ளாகியிருப்பதாக அறியப்படுகிறது.

தமிழ்மொழிக்கான விரிவுரைகள் இன்னமும் ஒழுங்காக ஆரம்பிக்கப்படாததால் தமிழ் மாணவர்கள் ஏமாற்றமடையவேண்டியிருப்பதாகத் தெரிகிறது. இந்த விரிவுரைக்கான ஒலிபெருக்கி வசதிகள் ஒழுங்காக இன்னமும் செய்யப்படாததால் தினமும் மாணவர்கள் விரிவுரைகள் இன்றி ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல வேண்டியுள்ளதாம்.

சிங்களமொழி விரிவுரை ஒழுங்காக நடைபெற சகல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும் வேளையில் தமிழ்மொழி விரிவுரைக்கு இவ்வித வசதிகள் இன்னமும் செய்யப்படாதது தமிழ் மாணவரிடையே பெருத்த அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளதாகத் தெரிகிறது.

இதுபற்றி தமிழ் விரிவுரையாளர் பல்கலைக் கழக அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர்.

## தமிழரசுக்கட்சிக் கிளை

யாழ்ப்பாணம், வெள்ளி

திருநெல்வேலி வடக்கில் தமிழரசுக்கட்சிக் கிளை ஒன்று சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இதனையொட்டி தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. ஏ. கே. ராமலிங்கம், திரு. பொன்னையா ஆகியோரும் பேசினர்.

கிளை உறுப்பினர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. டி. ராமுப்பிள்ளை, உபதலைவர்: திரு. என். பி. சண்முகம், காரியதரிசி: திரு. எஸ். துரைச்சாமி, உபகாரியதரிசி: திரு. கே. எஸ். பத்மநாதன், தனாதிகாரி: திரு. எஸ். துணிகாசலம் 10 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## மரம்நாட்டு விழா

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு வல்லன் கிராம முன்னேற்றச்சங்க ஆதரவில் மரம் நாட்டுவிழா கிராம சபைத் தலைவர் திரு. கு.வி. தம்பித்துரை தலைமையில் நடைபெற்றது.

பனை, தென்னை போன்ற பயன்தரும் மரங்களை நாட்டி நமது பொருளாதாரத்தை வளர்க்கவேண்டுமென இக்கூட்டத்தில் உரைநிகழ்த்திய புரக்டர் பி. கதிரவேலு குறிப்பிட்டார்.

தீவுப்பகுதி கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. கே. நடேசன், ஆசிரியர் திரு. க. ஐயாத்துரை, திரு. கே. குழந்தைவேலு, திரு.சு.நடராசா ஆகியோர் உட்பட வேறு சிலரும் உரைநிகழ்த்தினர்.

## வரவேற்புபசாரம்

மட்டக்களப்பு, வெள்ளி

கிழக்கிலங்கைத் தமிழாசிரிய சங்கச் செயலாளரான திரு. டி. எஸ். கே. வணசிங்கா கடந்தமாதம் சீனு சென்று திரும்பியுள்ளதையிட்டு மட்டக்களப்பு இளம் எழுத்தாளர் சங்கம் அரசடிப் பாடசாலையில் ஒரு வரவேற்பும் தேநீர் விருந்தும் அளித்தது.

## "பாடசாலைகள் தொழிற்சாலைகளல்ல"

நல்லூர், வெள்ளி

''பாடசாலைகள் வெறும் தொழிற்சாலைகள் அல்ல. எதிர்காலச் சந்ததியினர்களுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய சிறந்த கல்வியைப் புகட்டும் புனித நிலையங்களே பாடசாலைகள். எனவே ஆசிரியர்கள் அன்பு நெறியில் நின்று அன்புணர்ச்சியுடன் தங்கள் கடமையைச் செவ்வனே செய்தல்வேண்டும்'' இவ்வாறு இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் கடந்த 39 ஆண்டுகளாகக் கடமையாற்றி இளைப்பாறிய ஆசிரியர் திரு. செ. சின்னத்துரையின் நிழலுருவப்படத்தைத் திரைநீக்கஞ்செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்க ஆதரவில் நடந்த இவ்வைபவத்தில் கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் பேசும்போது திரு. சின்னத்துரை மகாஜனக் கல்லூரியின் வளர்ச்சியில் புதுமைக்கும் பழமைக்கும் பண்பு நிறைந்த பாலம் போலத் திகழ்ந்துள்ளாரெனக் குறிப்பிட்டார்.

வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி திரு. முருகேசம்பிள்ளை, மல்லாகம் வழக்கறிஞர் திரு. சு. நடராசா ஆகியோர் ஆசிரியரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்கள். திரு. சின்னத்துரை தமக்களிக்கப்பட்ட பாராட்டு வைபவத்திற்கு நன்றிதெரிவித்துப் பேசினர்

## வேதனை தாங்காது தற்கொலை செய்தார்

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி வடக்கு வதிரி என்னுமிடத்தில், பரியந்தர் வளவைச்சேர்ந்த எம். சபாபதிப்பிள்ளை (55 வயது) என்ற விவசாயி புற்றுநோயின்வேதனை தாங்காமல் அல்வாய் தெற்கு கஞ்சாந்தனை என்னுமிடத்திலுள்ள ஆழமான கிணற்றுள் விழுந்து தற்கொலை செய்து கொண்டார். கிணற்றுள் விழுந்த மறுநாளே இவர் கண்டெடுக்கப் பட்டார். திடீர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## முதலாளிகளுக்கு முகம்மது யோசனை

மன்னர், வெள்ளி

முதலாளிகள், தங்கள் ஊழியர்களுக்கு நல்ல சம்பளமும், நல்ல வேலை வசதியும் அளிக்கவேண்டும் என தொழில் மந்திரி திரு. முகம்மது இங்கு ஒரு கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டார்.

தேசிய அரசாங்கம் பதவி ஏற்குமுன் நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டம்பெருமளவில் இருந்ததென்றும். ஆறு மாதத்தில் இதற்குப் பரிகாரம் காணமுடியாது என்றும் அவர் கூறினர். ஆனல் நமது பதவிக்காலத்தில் பெரும்பாலோருக்கு வேலையளிக்கும் [illegible]யை தாம் இழக்கவில்லை என்றும் அவர் கூறினர்.

## திருக்கோணமலை காணிக்கச்சேரி விபரம்

### எம்.பி. மந்திரியிடம் கேட்பார்

பம்பலப்பிட்டி, வெள்ளி

இம்மாதம் 21-ம் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபை கூடும்போது காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சரிடம் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி பின்வரும் கேள்விகளைக் கேட்கவிருக்கிறர்.

(அ) திருக்கோணமலை தேர்தல் தொகுதியிலுள்ள பெரியகுளம் கிராமத்துக்கென 1965-ம் வருடம் மே மாதத்தில் காணிக்கச்சேரி ஒன்று நடத்தப்படுமென திருக்கோணமலை அரசாங்க அதிபரால் அறிவிக்கப்பட்டது என்பது மந்திரி அறிவாரா?

(ஆ) காணிக்கு விண்ணப்பித்தவர்களின் பெயர்களை அயர் சமர்ப்பிப்பாரா?

(இ) அது ரத்துச் செய்யப்பட்டதா?

(ஈ) அப்படியெனில் ஏன்?

(உ) முதலிலிருந்தகாணிக் கச்சேரி கந்தளாய் பகுதியையும் சேர்த்திருந்தது என்பதை மந்திரி அறிவாரா?

(ஊ) சிங்கள மக்களுக்குக் காணி வழங்கப்படுவதற்கு மந்திரி நடவடிக்கை எடுப்பாரா? இல்லையெனில் ஏன்?

## மாணவர் இல்லத்தில் சங்கீத வகுப்பு

உருத்திரபுரம், வெள்ளி

காந்திநிலைய மாணவர் இல்லத்தில் விஜயதசமி அன்று சங்கீதவகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தச் சங்கித வகுப்பில் தேவாரமும், கர்நாடக சங்கீதமும் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. வாரந்தோறும் திங்கட்கிழமையிலும், வெள்ளிக்கிழமையிலும் பிற்பகலில் இவ்வகுப்பு நடைபெறுகிறது. சங்கீதபூஷணம் எப். ஸி. இரத்தினவேதன் இவ்வகுப்பை நடத்துகிறர்.

## பத்திரிகை ஆசிரியர் மீது நடவடிக்கை இருக்காது

கொழும்பு, வெள்ளி

'சன்' பத்திரிகை ஆசிரியர் திரு. டி. டி. பி. தனபாலாவுக்கு எதிராக மேற்கொண்டு எதுவிதமானநடவடிக்கையும் எடுப்பதில்லையென்று நேற்றுக்காலை கூ. மொ. வி. விசாரணைக் கமிஷன் முடிவுசெய்துள்ளது.

கூ. மொ. வி. விசாரணைக் கமிஷன் பற்றி திரு. யு. என். விஜதுங்கா எழுதிய ஒரு கட்டுரை 'சன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

## வவனியாவில் நிவாரண உதவி

வவனியா, சனி

வவனியாப் பகுதியில் சூருவளி நிவாரண வேலைகள் இதுவரை காலமும் 167 நிலையங்களிலேயே நடைபெற்று வந்தன. அனேகமாக இவ்வேலைகள் பாதைகள் ரேட்டுக்கள் திருத்துவதாகவே அமைந்திருந்தன.

தற்பொழுது விதைப்புக் காலம் தொடங்கியதைத் தொடர்ந்து அடுத்தவாரம் தொடக்கம் தங்கள் சொந்த வயல்களிலேயே வேலைகள் செய்து அதற்கான ஊதியத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவனியா பாராளுமன்ற உறுப்பினர் திரு, தா. சிவசிதம்பரம் இந்தத் திட்டத்திற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

## பாக். விமானங்கள் தாக்கின

புதுடில்லி, அக். 15

பாகிஸ்தானிய விமானங்கள் ராஜஸ்தான் எல்லைக்குள் 23 மைல் வந்து தாக்கின என்றும் சேதம் ஏற்படவில்லையென்றும் அறிவிக்கப்பட்டது.


குதிரை மார்க் வாளிகள்



குதிரை மார்க் கல்வனைஸ்ட் வாளிகளை வாங்கி உபயோகிக்கிறீர்களா?

இன்றே வாங்குங்கள்

குதிரை மார்க் வாளிகள் தரத்தில் உயர்ந்த இரும்புத் தகடுகளினுல் செய்யப்பட்டவை. எங்கள் தொழிற்சாலையில் மட்டும் கல்வெக்ஸ் முறைப்படி விசேஷமாக தயாரிக்கப்படுவன. உங்களுக்கு வேண்டிய எல்லாவித அளவுகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்:

எல்பிஹெம் ஹவுஸ்

கொழும்பு-11.

வடமாகாண விநியோகஸ்தர்:

தனலக்குமி ஸ்ரோர்ஸ்

தெல்லிப்பளை.

ஏனைய மாகாணங்களுக்கு:

மஸ்கன்ஸ் லிமிட்டெட்

கொழும்பு-12.

HORSE BRAND


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

அரசாங்க கேள்விப்பத்திரம்
யாழ்ப்பாணக் கச்சேரி

என் 1845-ஆடிக் குத்தகை-காரைநகர். ஊர்காவற்றுறை ஆகிய சேவை 1-1-66 தொடக்கம் 31-12-66 வரைக்கும். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 15-11-65. இதன் முழு விபரங்களையும் 15-10-65 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, 11-ம் தொகுதியில் பார்க்கவும். 186

## நெடுந்தீவு பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கம்

இச்சங்கத்தின் நிரந்தர சேவைக்கென ஓர் லிகிதர் தேவை. பின்வரும் தகுதியுடையோர் 22-10-65 க்கு முன் விண்ணப்பிக்குக.

1. வயது: 23 க்கும் 40 கும் இடையிலுள்ளோர்.
2. கல்வித் தராதரம் G. C. E. தமிழ் அல்லது அதற்குச் சமமான வேறொரு பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

கூட்டுறவுப்பயிற்சி முக்கிய தராதரமாகக் கவனிக்கப்படும்.

3. இருநற்சான்றிதழ்கள்.
4. பிணை: ரொக்கப்பிணை ரூபா. 500/-
   ஆதனப்பிணை: ரூபா. 1000/-
5. சம்பள விகிதம்: ரூபா 1200 — 2400

12X90 : 1X120

உடன் வேலையேற்க ஆயத்தமாயிருத்தல்வேண்டும்.

இரா. சின்னத்தம்பி
தலைவர்.

நெடுந்தீவு,
14-10-65. 1211




## சிதம்பரா வென்றது

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'பி' பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் வண்ணை வைத்தீஸ்வராக் கோஷ்டியும், வல்வெட்டித்துறை சிதம்பராக் கோஷ்டியும் மோதிக் கொண்டன.

இடைவேளைக்கு முன்னர் வைத்தீஸ்வரா முன்னணி வீரர்கள் திறமையாக விளையாடி சிதம்பரா கோலுக்குள் ஒரு கோலைத் தள்ளினர். இந்தக் கோலை முன்னணி வீரர் அன்வர் இறக்கினுர்.

இடைவேளைக்குப் பின்னர் சிதம்பராக் கோஷ்டி வீரர்கள் சற்று விறு விறுப்பாக விளையாடி இரண்டு கோல்களை வைத்தீஸ்வராக் கோலுக்குள் தள்ளினுர்கள்.

வைத்தீஸ்வரக் கோஷ்டியை சிதம்பராக் கோஷ்டி 2 - 1 கோல்களால் தோற்கடித்தது.

இப்போட்டிக்கு திரு. பி. ஏகாம்பரம் மத்தியஸ்தராகச் கடமையாற்றினுர்.

## தோல்வி

சைகோன், அக். 15

பெருந்தொகையான வியட்காங் படைகளை சுற்றிப் பிடிப்பதற்கு 10000 அமெரிக்க துருப்புக்கள் 5 நாட்களாகச் செய்த முயற்சிகள் தோல்வியடைந்தன. இக்கைகலப்பில் 60 வியட்காங் வீரர்கள் மாண்டனர்.

## மகாஜனக் கல்லூரி வெற்றி

சுழிபுரம், வெள்ளி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி முதலாம் பிரிவுக்கோஷ்டிக்கும், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி 1-0 கோலைப்போட்டு வெற்றி பெற்றது. மேற்படி கல்லூரிகளின் இரண்டாம் பிரிவுக் கோஷ்டியினருக் கிடையே நடைபெற்ற போட்டியில் மகாஜனக்கல்லூரி 3-0 கோல்களைப் போட்டு வெற்றிபெற்றது. இடைவேளைக்குப்பின்னர் போட்டி மிகவும் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. போட்டி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.




## கொழும்பு

### சனி 16-10-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 செய்திச்சுருள், 7-00 இசைக்கச்சேரி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 உரைச்சித்திரம், 10-00நேயர்விருப்பம்

### ஞாயிறு 17-10-65

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீட்டர்&61 மீட்டர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-00 தேர்ந்த இசை, 7-45 தமிழோடிசைபாடல், 8-00 துதிப்பாடல்கள், 8-15 ஞானமிர்தம்

344 மீட்டர்&71 மீட்டர்

8-30 முத்திநெறி, 9-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 படப்பாட்டுக்கள், 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 குதூகலம்.

344 மீட்டர்&61 மீட்டர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரை இசை.

இரவு 6-10 வாத்திய இசை, 6-15 தாளவாத்தியக் கச்சேரி, 6-45 நேயர் கடிதங்கள், 7-00பாட்டு, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மனைவிளக்கு—மாதர் நிகழ்ச்சி, 9-45 மாதர் கேட்டவை, 10-15 தேர்ந்த இசை.


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது !

கெப்பிட்டல் (கொழும்பு) மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்)

மொடேர்ன் (பதுளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6-00, 9-30 க்கும்
சனி, ஞாயிறு காலை 10 மணிக்கும்

" இன்பம் தேடுது இளம் மனசு ! - அதிலே
இருக்கும் வகைகள் பல தினுசு !
அன்பு நிறைந்ததும் பெண்ணிடத்தில் - என்ற
அறிவு விளக்குது இப்படத்தில்"



முத்துராமன், புதுமுகம் நளினி, அசோகன், நாகேஷ், ராமதாஸ், மனோரமா, சின்னப்ப தேவர்
நடித்த
தெய்வத் திருமகள்



REGAL—JAFFNA
NOW SHOWING !
Charlton Heston
in
DIAMOND HEAD
(Panavision - Color)


# வரி விளம்பரம்

### வாடகைக்கு

காங்கேசன்துறையில், கீரிமலை ரேட்டில், பொலிஸ் ஸ்ரேஷனுக்குஅருகாமையில் சகல வசதிகளுடன்கூடிய வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: ஏ. ஈ. தம்பர், 95, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 1130

அரசடிவீதிக்கு அருகாமையில், யாழ். இந்துக் கல்லூரி, இந்து லேடீஸ் கல்லூரிக்கு மிகச் சமீபத்தில், பாட்டிஷன் வீடு—4 அறைகள், நீண்ட உட்சாலை, முன்விருந்தை, சமையலறை, தனிக் கிணறு அடங்கியவை. ரூபா 100/- மாத வாடகைக்குக் கொடுக்கப்படும். திருமதி N. பழனியப்பர், இல. 1 A, சீனியர் ஒழுங்கை, வண்ணுர்பண்ணை கிழக்கு விலாசத்திற் காணவும். 1152

பதிவுசெய்த வரிசைக்கிரமமாக 'கற்றபிலர் புல்டோஸர்' உடனடியாக வாடகைக்குண்டு. முன்னதாகவே பதிவுசெய்துகொள்ளலாம். முருகன் ஸ்ரோர்ஸ், பரந்தன். 1153

### விற்பனைக்கு வாடகைக்கு கொமிஷனுக்கு

ஹோட்டல், கபே முதலியவைகளுக்கேற்ற தற்கால நவீன தளபாடங்கள் (ஐஸ் பெட்டி, பான் 3, (இங்கிலிஷ் தயாரிப்பு), மாபிள் மேசை 20, உட்பட சகலதும் விற்பனைக்கிருக்கிறது. விரும்புவோருக்கு அதே தளபாடங்களுடன் மூன்று மாடிக்கட்டடம் வாடகைக்கோ அல்லது கொமிஷனுக்கோ ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். குடிவகைச் சாய்ப்புகளுக்கு மிகப்பொருத்தமான இடம், விபரங்களுக்கு: சிங்கப்பூர் கபே, 204, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். 1126

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

நாவலர் வீதி, 321-ம் இலக்க வீடும் அதனுடன் சேர்ந்த 3 2/1 பரப்புக் காணியும் (வைமன் வீதிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்) விற்பனைக்கு உண்டு. வாங்கவிரும்புபவர்கள் மேற்கண்டவிலாசத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும். 1151

உறுதியும் நல்ல நிலைமையிலுமுள்ள புதிய மீன்பிடி இயந்திரவள்ளம் 33 அடி நீளம் கீழ்ப்பாகம் செப்புத் தகடு லிஸ்டர் 3 சிலிண்டர் வாட்டர்கூல் எஞ்சின் 22 மாதங்கள் மாத்திரம் பாவிக்கப்பட்டுள்ளது. நியாயமான விலைக்குக் கொடுக்கப்படும். ஜி. செபமாலை, முல்லைத்தீவு. 1149

கொழும்பு Technical College இல் Motor Mechanism படித்தவரும், 20 வருட அனுபவமுள்ளவருமானவர். சொந்தக்காரர் வீட்டில் வந்து கார் றிப்பேயர்செய்து கொடுப்பார். கே. கனகசுந்தரம், சிவன்கோவில்வீதி, ஆவரங்கால் புத்தூர். 1140

### வைத்தியம்

வாதம், கிரந்தி, நீழிரிவு, தொய்வு, மூலரோகம் குணப்படுத்த உத்தரவாதம் மாதர் - குழந்தைகள் ரோகங்களுக்கு விசேட சிகிச்சை பெறலாம். அதிபர் சாரதா தேவி வைத்திய நிலையம், சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். கிளை: சோ. சிவகடாட்ச ஐயர் இல்லம், மணற்காடு, காரைநகர் மேற்கு. 1139

## யாழ்ப்பாணத்தில் புதிய கல்விக் காரியாலயம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் புதிய கல்விக் காரியாலயக் கட்டடமொன்றைக் கட்ட கல்வி இலாகா முடிவு செய்துள்ளது.

சொந்தக் கட்டடம் இல்லாததினுல் காரியாலயம் இயங்க வேண்டியிருப்பதால் இலாகாவுக்கு அதிக செலவு வருடா வருடம் ஏற்பட்டு வருவதாகவும் இதனைத் தடுக்குமுகமாகவே சொந்தக் கட்டடம் கட்டப்பட விருப்பதாகவும் அறியப் படுகிறது.

நவீன வசதிகளைக் கொண்ட புதிய கல்விக் காரியாலயம் விரைவில் கட்டப்படும் என அறியப்படுகிறது. முத்திரைச் சந்தைக் கருகில் கட்டடம் கட்டுவதற்கான காணியை கல்வி இலாகா வாங்கியுள்ளது.




மலிவு விற்பனை
5-10-65 — 23-10-65
தீபாவளி
பண்டிகையை முன்னிட்டு
கண்கவர் டிசைன்களில்
சாறிகளும் றெடிமேட் உடுப்புகளும்
மற்றும்
பலவிதமான ஜவுளி தினிசுகளும்
குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்படுகிறது.
கையிருப்பு முடியுமுன்
உங்களுக்குத் தேவையானவற்றைதெரிவு செய்ய
அன்புடன் அழைக்கின்றேம்.
திருமண வைபவங்களுக்கு தேவையான
கூறை சாறிகள்
பலவிதமான டிசைன்களில் எம்மிடம் கையிருப்பில் உண்டு.
மைலன்ட்ஸ்
115, 117, கே. கே. எஸ். ரேட், — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பல்வேறு அரங்குகளில் மோதல்கள்

# பீரங்கி, நடுத்தர டாங்கிகள் பாக். படைகள் சுட்டன

## சீனுவின் போர் ஆயத்தங்கள் தீவிரம்

புதுடில்லி, அக். 14

**கடந்த இருபத்திநான்கு மணி நேரத்தில், லாகூர் அரங்கின் பல பகுதிகளில் பாகிஸ்தான் படைகள் போர் நிறுத்தத்தை மீறி தாக்குதல்களை நடத்திவருவதாக இன்று கிடைத்த கடைசிச் செய்திகள் கூறுகின்றன.**

சியால்கோட், நௌஷாரா, அக்னூர் ஆகிய பகுதிகளிலும் திரிபுராவிலும் பாகிஸ்தான் துருப்புகள் பதட்ட நிலையைத் தோற்றுவித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே கம்யூனிஸ்ட் சீனுவில், போர் ஆயத்தங்கள் தீவிரமடைந்துவருவதாகவும் மக்கள் சேனை அணிகள் போர் ஒத்திகை நடத்திவருவதுடன் செய்திப் பத்திரிகைகளும் ''யுத்த ஆயத்த அறிவிப்புகளை'' பிரசுரிக்கத் தொடங்கியிருக்கின்றன என்றும் இன்றிரவு தாமதித்துக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

லாகூர் அரங்கின் பல பகுதிகளிலும் பாகிஸ்தான் துருப்புகள் தாக்குதல்கள் நடத்தத் தொடங்கியுள்ளன. பீரங்கிகளினாலும், நடுத்தர டாங்கிகளினாலும் அவர்கள் தாக்குதல்கள் நடத்திவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு இடத்தில் பாகிஸ்தான் துருப்புகள்மீது இந்திய துருப்புகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர். இந்திய தரப்பில் சேதமில்லை.

சியால்கோட் அரங்கில் பாகிஸ்தானியப் படைகள் புதிய நிலைகளை ஏற்படுத்திவருகின்றன என்றும், படைகளும் அதிகரிக்கப்பட்டன என்றும் செய்திகள் கூறுகின்றன. நௌஷாரா அரங்கில் பாகிஸ்தான் துருப்புகள் இன்று சுடத் தொடங்கினர். இப்பகுதியில் அவர்கள் விட்டு விட்டுத் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவருகின்றனர்.

அக்னூர் மேற்குப்பகுதியிலும் வடமேற்குப் பகுதியிலும் பாகிஸ்தான் படைகள் புதிய நிலைகளைப் பிடிப்பதிலும் இந்தியப் படைகளிடம் இழந்த பகுதிகளை கைப்பற்றுவதிலும் புதிய முயற்சிகளைக் கையாண்டுவருகின்றனர். இங்கும் பதட்ட நிலைமை உருவாகியுள்ளது.

கிழக்கு பாகிஸ்தான் திரிபுரா பகுதி நெடுகிலும் புதிய பாகிஸ்தான் படைகள் நிலை கொண்டுள்ளன. காவல் நிலைகள் அமைப்பதிலும் படை சாதனங்கள், வெடி மருந்துகள், ஆகியவற்றைக் குவிப்பதிலும் இவர்கள் தீவிர அக்கறை செலுத்தி வருகின்றனர்.

### சீனுவில்

இதற்கிடையில் கம்யூனிஸ்ட் சீனுவில் போர் ஆயுதங்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகசெய்திகள்கூறுகின்றன. மக்கள்விடுதலை சேனை புதுப்பிக்கப்பட்டுள்ளது. ''போர் ஒத்திகை'' நடைபெற்று வருவதாகவும்பெண்கள்இப் படையில் அதிகமாக இருக்கிறார்கள் என்றும் ஏஜன்ஸி செய்திகள் கூறுகின்றன.

சீனப் பத்திரிகைகளும் போர் ஆயத்த செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

---

# தெய்வீக சக்தி கொண்ட சிவானந்தர் உருவச்சிலை

## பக்திபரவசம் மேலிட பலாலி விமான நிலையத்தில் வரவேற்கப்பட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி

''இமயஜோதி சுவாமி சிவானந்தரின் உருவச் சிலையைப் பெற்ற இன்றைய தினம் ஈழத்துக்கு ஒரு புனித தினம் என்றே சொல்ல வேண்டும். நேரிலே சுவாமியைப் பார்க்க முடியாத பெரும் குறையை, இத்தத்ரூபமான அவர் உருவச் சிலை நீக்கிவிடுமென்கின்ற அளவுக்கு இச்சிலையில் ஒரு தெய்வீக சக்தியைக் காணக்கூடியதாகவிருக்கிறது.''

இமாலயத்திலுள்ள ரிஷி கேத்திரத்திலிருந்து திவ்விய ஜீவன சங்க ஸ்தாபகர் ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் உருவச் சிலையை இங்கு கொண்டுவந்த ஸ்ரீ ஓங்காரானந்த சரஸ்வதி பலாலி விமான நிலையத்தில் நேற்று மத்தியானம் விமான மூலம் வந்திறங்கியதும், தம்மை வரவேற்க வந்திருந்தவர்கள் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திவ்விய ஜீவன சங்க சுன்னாகக் கிளையைச் சேர்ந்தவர்களும், யாழ்ப்பாணக் கிளையைச் சேர்ந்தவர்களும் விமான நிலையத்தில் சுவாமியை வரவேற்றனர். ஓங்கார சுவாமியை டாக்டர் செல்லத்துரை மலர்மாலை அணிவித்து வரவேற்றார்.

சுவாமி கொண்டுவந்த சிவானந்தரின் உருவச் சிலை தரிசனத்துக்காக விமான நிலைய முன்வாசல் மண்டபத்தில் வைக்கப்பட்டபோது, யாழ். கிளை திவ்விய ஜீவன சங்க உப தலைவர் அட்வக்கேட் சூரசங்காரம் சிலைக்கு மாலை சூட்டினார்.

நிஷ்டையில், உட்கார்ந்தபடி இருப்பதுபோல மிகவும் அழகாகச் சிவானந்தரின் சிலை செதுக்கப்பட்டிருந்தது.

''சற்குருதே, சற்குருதே, சற்குருதே, பாகிமாம்....'' என்ற தோத்திரத்தை பக்தி மேலீட்டினால் ஓங்கார சுவாமிகள் படிக்க, அதைத் தொடர்ந்து விமான நிலையத்தில் சுவாமியை வரவேற்கவிருந்த பெண்கள் உட்பட பலர் அக்கோஷத்தை உச்சரித்தனர். பக்திபரவசத்தை ஏற்படுத்தக்கூடிய விதத்திலிருந்தது அந்தக் காட்சி!

ஓங்கார சுவாமிகள் சிவானந்தரின் அச்சிலையைப்பற்றிச் சில சுவையான தகவல்களைச் சொன்னார்.

ரிஷிகேசத்துக்குப் போனபோது அங்கு அழகான, உயரமான சரஸ்வதி, லட்சுமி ஆகிய இரண்டு சிலைகளைப் பார்த்ததாகவும், அச்சிலைகளை யார் செய்தது என்று அங்கிருந்தவர்களைக் கேட்டபோது, அங்கிருக்கும் ஜெர்மனியைச் சேர்ந்த இளம் துறவிப் பெண் செய்ததாகக் கூறியதாகவும், பின்னர் தமக்கு அப்பெண்ணைக்கொண்டு சிவானந்தரின் சிலையைச் செதுக்கிக் கொடுக்கவேண்டுமென்ற ஆசை ஏற்பட்டதாகவும் சொன்னார்.

தாம் அந்தத் துறவிப் பெண்ணைச் சந்தித்து, தமது விருப்பத்தைச் சொன்னதாகவும், அவர் சிலையை உருவாக்கித்தந்ததாகவும் கூறினார்.

சிவானந்தரின் சிலையை இங்கு கொண்டுவந்து சேர்ப்பதில் தாம் பெரிதும் கஷ்டப்பட்டதாகவும், சிவானந்தரின் தெய்வீக சக்தியே சிலை உடைந்து பழுதுபோகாதபடி காத்துக்கொண்டதெனவும் தெரிவித்தார்.

பலாலி விமான நிலையத்திலிருந்து சுன்னாகம் கிளை திவ்விய ஜீவன சங்கத்தினர் செய்துகொண்ட ஒழுங்கின்படி சுன்னாகம் கோவிலுக்கு சுவாமி உருவச் சிலையுடன் விஜயம் செய்தார். சிவானந்தரின் உருவச் சிலைக்கு பூஜைகள் முடிந்தபிறகு அங்கு மத்தியான போசனம் அளிக்கப்பட்டது. இதனையடுத்து சிவானந்தரின் உருவச் சிலை பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது.

---

# டட்லிக்கு சாஸ்திரி கடிதம்

புதுடில்லி, அக். 14

இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவிடம் கையளிக்கும்படி திரு. சாஸ்திரி ஒப்படைத்த செய்தி தம்மிடம் இருப்பதாயும், விரைவில் தாம் இலங்கை செல்லப்போவதாயும் இந்திய வெளிநாட்டு மந்திரி திரு. தினேஷ்சிங் கூறினார்.

---

# சகோதர ஒற்றுமை!

பிரிஸ்பேன், அக். 14

ஆஸ்திரேலியாவில் உள்ள இருசகோதரிகளுக்கிடையே பெரும் ஒற்றுமை இருக்கிறதோ என்று எண்ணக்கூடியதாகவிருக்கிறது. சகோதரிகள் இருவரும் ஒரே தாய் வயிற்றில்பிறந்த அண்ணையும், தம்பியையும் திருமணம் செய்துகொண்டனர். சகோதரிகள் இருவரும் ஒரே ஆஸ்பத்திரியில் ஒரே நாளில் ஒவ்வொரு ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தனர். ஒரே டாக்டர் இவர்களுக்கு சிகிச்சை அளித்தார். திருமதி வால் ரீவால்ட் (25) என்பவரும் திருமதி பிரெண்டா ரீவால்ட் என்பவருமே அந்த ஒற்றுமை மிக்க சகோதரிகளாவர்.

---

# ரொடீஷியா பிரச்னை இலங்கை அக்கறை

கொழும்பு, வியாழன்

ரொடீஷியா பிரச்னை குறித்து ஆராயும் பொருட்டு கூட்டப்படவிருக்கும் உத்தேச காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கலந்துகொள்ளவேண்டும் என்று அரசாங்கக் கட்சி எம். பி.க்கள் கருதுகின்றனர். ரொடீஷியாவில் நிலைமை மிகவும் மோசமாகவிருப்பதால் அங்குள்ள மக்களின் நலனில் இலங்கையும் பங்குகொள்ள வேண்டும் என்று இவர்கள் கருதுகின்றனர்.

ரொடீஷியர் சம்பந்தமான உத்தேச காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு குறித்து பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சனிடமிருந்து இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு ஒரு செய்தி கிடைத்துள்ளது.

---

# கால்நடைகள் திருட்டு

ஊர்காவற்றுறை, வியா.

புங்குடுதீவு ஏழாம்வட்டாரத்தில் சமீபகாலமாக ஆடு, மாடு திருட்டு அதிகரித்துவருவதாகக் கூறப்படுகிறது. கேரதீவு என்று அழைக்கப்படும் காட்டுப்பக்கத்தில் இருந்து இரவு நேரங்களில் வான் மூலம் ஆடு, மாடுகள் கடத்திச் செல்லப்படுவதாகவும் புகார் கூறப்படுகிறது. வெளிச்சமில்லாத வான்கள் அப்பகுதிகளில் இரவில் செல்வதாகவும் கூறப்படுகிறது.

பட்டப்பகலில் ஒருவரும் இல்லாத வேளைகளில் வீடுகளில் புகுந்து சேலை துணிகளையும் திருடுவதில் திருடர் தம்கைவரிசையைக் காட்டிவருகின்றனர்.

---

# யாழ். கச்சேரியில் புதிய காரியாலயம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். நில அளவைப் பகுதியின் காரியாலயம் அடுத்தவாரம் முதல் யாழ்ப்பாணம் கச்சேரி கட்டடத்திற்கு மாற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# கொழும்பு மாநகரசபையில் வெளிநடப்பு

பம்பலப்பிட்டி, வியா.

கொழும்பு மாநகரசபைக் கூட்டம் நேற்று நடைபெற்றுக்கொண்டிருக்கையில் 4 எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

மாநகர சபை தனது அலுவல்களை ஜனநாயக முறைக்கு முரணாகவும் சபையின் நடைமுறை விதிகளை அனுசரியாமலும் நடத்திவருவதாக அவர்கள் புகார் தெரிவித்து இதனை ஆட்சேபிக்கும் வகையிலேயே மேற்படி நான்கு அங்கத்தவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

திருமதி விவியன் குணவர்த்தன திருவாளர்கள் பெர்னாட் சொய்ஸா, ஆனந்தா பிரேமசிங்கா, லால்சால்க கொடை ஆகியோரே வெளிநடப்புச்செய்த நால்வருமாவார்.

---

# ஐயாறன்

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆகவே எம். ஜி. ஆர். அடுத்தவாரம் இங்கு வருவது அநேகமாக உறுதி என்று ஏற்படுகின்றது. இச்செய்தியை அறிய இங்கு பல்லாயிரக்கணக்கான உள்ளங்கள் குளிர்ந்திருக்கும். அவரது விஜயத்துக்கு விசேஷ விளம்பரம் அளித்ததுடன் இனிதமிழ்நாட்டிலிருந்து பல தலைவர்களும் வருவதற்குத் தடையிராதென்ற செய்தியையும் அறிவிக்கச் செய்த அந்த செனட்டருக்கு நாம் ஸ்பெஷல் 'தாங்க்ஸ்' கூறவேண்டும். வீண் புருடாக்களும், பூச்சாண்டிகளும் எவ்வளவு காலம் பலிக்க முடியும்? மனித அடிப்படை உரிமைகளை மறுப்பவர்கள் கதியும் இது தான்.

° ° °

இலங்கையரை மணந்த இந்தியப் பெண்கள் இதுவரை கட்டிய விஸாவரியை திருப்பிக்கொடுத்து விடவும் தேசிய அரசாங்கம் தீர்மானித்துள்ள நல்ல செய்தியைக் கேட்டதும் வேதாரணிய சைவக்குருக்கள் ஒருவர் தாங்கள் கட்டிய வரிப் பணத்தையும் திருப்பித் தருவரா என்று கேட்டார். சமய சேவைசெய்யும் அவர்களுக்கு வரி தேவையில்லை என்று விலக்கு அளித்திருந்தார்கள். ஆனால் டயஸுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. மனம் மாறி மீண்டும் வரிபோட்டுவிட்டார். இவ்விஷயங்களிலே சின்னப்புத்தி காட்டாமல் சற்றே தாராள மனப்பான்மை காட்டுவதால் இங்கு சைவ சமூகத்தின் அபிமானத்தையும் அரசாங்கம் பெறமுடியும்.

° ° °

வானவர் வணங்க வைத்தார் வல்வினை மாயவைத்தார், கானிடை நடமும் வைத்தார் காமனைக் கனலா வைத்தார், ஆனிடை ஐந்தும் வைத்தார் ஆட்டுவார்க்கருளும் வைத்தார், ஆனையின் உரிவை வைத்தார் ஐயன் ஐயாறனாரே.

— அப்பர்சுவாமிகள்.

---

# "மருந்துத் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. முத்துத்தம்பி கொண்டுவரவிருக்கும் பிரேரணை வருமாறு:-

வைத்தியநிபுணர்களாலும் வைத்திய அதிகாரிகளாலும் எழுதப்படும் உயிரைக் காப்பாற்றக்கூடிய அத்தியாவசிய மருந்துகள் பல யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி உள் நோயாளர்களுக்கும் வெளி நோயாளர்களுக்கும் கிடைக்காது போய்விடுறது. இருக்கும் சில மருந்துகள் கூட டாக்டர்களால் எழுதப்படுவதுபோல், முழுவதுமாக அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இந்தநிலை டாக்டர்களுக்கும் நோயாளர்களுக்கும் மிக்க தொந்தரவைக் கொடுக்கிறது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி அதிகாரிகள்மீது இதற்காகக் குறை கூறிவிடமுடியாது என்பதை கமிட்டி அறியும். ஆஸ்பத்திரி அதிகாரிகள் தேவையான மருந்துகளுக்காக அரசினர் மருந்துச்சாலைக்கு கடிதங்களும், தந்திகளும் அடிக்கடி அனுப்பி வருகிறார்கள். ஆனால் இவையெல்லாம் செவிடன்காதிலூதிய சங்கு போலிருக்கிறது. இக்கமிட்டியும் சுகாதார சேவை டைரக்டருக்கு அடிக்கடி இதுபற்றித் தெரிவித்துக்கொண்டுவந்துள்ளது. ஆனால் இவ்வித நிலை வரவர மோசமாக் கொண்டே வருகிறது. எனவே இது விஷயத்தில் சுகாதார மந்திரி அக்கறை கொண்டு தடையில்லாமல் தட்டுப்பாடில்லாமல் யாழ். ஆஸ்பத்திரிக்கு மருந்துகள் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இக்கமிட்டி கேட்டுக்கொள்கிறது.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org